மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 100/22 |
| பெயர் | : | சுரேஷ் (PW2) |
| த/பெ. | : | ஜனார்த்தரன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Balakrishannan A2 Pattu @ Pattukani are present. A3 Lakshmna Perumal is absent.Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of February 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் மருங்குர் கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கிறேன். நான் Cape infrastructure private கம்பெனியில் சைட் மேனஜராக வேலை செய்கிறேன்.அசா 1 ஐ தெரியும். பட்டியல் சாட்சி 2 கருப்பசாமியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 3 வது லஷ்மண பெருமாளை தெரியும்.

2)15.03.2021 மாலை 5.30 லிருந்து 6 மணிக்குள் சிங்கத்தகுரிச்சி சர்வே எண் 734 மற்றும் 735 ல் நான் ,கருப்பசாமி , அசா1 மற்றும் வடமாநிலத் தொழிலாளர்கள் காற்றாலையை நிறுவும் வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தோம்.1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் Bolero காரில் வந்து வேலை செய்யவிடாமல் தடுத்தார்கள். அசா 1 பரமசிவம் வேலை செய்வோம் என்று சொன்னார். அதற்கு 1 வது எதிரி நீளமான ராடினை எடுத்து வந்து சொல்ல முடியாத அருவருப்பான வார்த்தைகளை பேசி அசா 1 ஐ அடிக்க ஓங்கினார்.நான் விலக்கிவிட்டேன்.எதிரிகள் சென்றுவிட்டார்கள்.போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் தெரிவித்தேன்.நான் Cape infrastructure private கம்பெனியின் சைட் மேனஜர்.எங்களை வேலை செய்யவிடாமல் தடுத்ததாக சொல்லியுள்ளதில் அதற்காக நான் புகார் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.அசா1 எங்கள் கம்பெனிக்கு இட தரகர் என்றால் சரிதான்,ஒப்பந்தம் எடுத்து கிராவல்

பணியும் செய்து வந்தார்.மேற்படி ஒப்பந்தம் எடுத்து கிராவல் பணி அசா 1 செய்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.அசா1 வுடன் போடப்பட்ட ஒப்பந்த ஆவணங்களை போலீசாரியிடம் ஒப்படைத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது,எங்கள் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.அசா 1 வுக்கு சிங்கத்தா குரிச்சி.அவர் இரு சக்கர வாகனம் வைத்துள்ளரா அல்லது நான்கு சக்கரம் வைத்துள்ளாரா என்றால் இரண்டுமே இல்லை.

2)ராடுக்கும் பைப்பிற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் கார் வைத்திருந்தேன் என்றால் சரிதான்.சாட்சி கருப்பசாமியும் அப்பொழுது கார் வைத்திருந்தார் என்றால் சரிதான்.எங்களுடைய நிறுவனத்தின் பணிகள் பாதிக்கப்பட்டு இருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் எங்களுடைய நிறுவன வழக்கறிஞர் புகார் கொடுத்தார்.சம்பவத்து அன்று மாலை 6 மணிக்கு எங்கள் நிறுவன வழக்கறிஞரை சந்தித்தேன். எங்கள் வழக்கறிஞருடன் காவல்நிலையம் சென்றோம்.எங்கள் நிறுவனம் சார்ப்பாக வழக்கறிஞர் கொடுத்த புகாரில் சாட்சி கருப்பசாமி கையொப்பம் செய்தார்.சாட்சி கருப்பசாமி அந்த புகாரில் நடந்த சம்பவம் சாட்சி சுரேசுக்கு தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3) அசா1 க்கும் எதிரிகளுக்கும் என்ன முன்விரோதம் என்று எனக்கு தெரியாது.எங்கள் நிறுவனத்தில் இருந்து யாருக்கெனும் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் அதற்கு அசா1 வுக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரிதான்.அசா1 தன்னுடைய தனிப்பட்ட விரோதத்தால் எங்களுடைய நிறுவனத்தின் மூலம் எதிரிகள் எங்கள் நிறுவனத்தின் பணிகளை தடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

4) நான் சொன்ன மாதிரி நான் சொன்ன இடத்தில் எதிரிகள் என்னை பேசவில்லை என்றாலும் எதிரிகள் என்னை அடிக்க கம்பியை ஓங்க வில்லை என்றாலும் 1 வது எதிரி அவர்களை துாண்டிவிடவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.